

# ஶ்ரீ மஹாவீர வைபவம்

## ஶ்ரீ ரகுவீர கத்யம்

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்

ஸ்வாமி ஶ்ரீ வேதாந்த தேசிகன் அருளிச்செய்த ஶ்ரீ மஹாவீர வைபவம்



**ஸ்லோகம் - (21)**

இராமபிரானே! உன் தந்தையான தசரதன் கைகேயிக்குக் கொடுத்த வாக்கு பொய்யாகி விடுமோ என்ற அச்சத்தால் மனமிழந்து நின்றான். உன்னை வனம் செல்லுமாறு கட்டளையிட்டான். நீ அந்தக் கட்டளையை நிறைவேற்றுவதாக உன் தந்தைக்கு வாக்களித்தாய். அதற்காக உனக்கு கிட்டிய இளவசர் பட்டத்தையும் உதறித் தள்ளிவிட்டாய்.

**ஸ்லோகம் - (22)**

வனத்தில் திரியும் வேடர்களுக்குத் தலைவனான குஹனிடம் எல்லையற்ற நட்பு கொண்டாய். இப்படி மிக மேம்பட்ட பரம்பொருளான நீ, மிகத் தாழ்ந்தவனான குஹனோடு இடையீடின்றிக் கலந்து பரிமாறியதால், கடல் போல் மிகுதியான ஸௌசீல்யம் என்னும் குணத்திற்கு நீ உறைவிடமாக உள்ளவன் என்று நன்கு புலப்படுகின்றது.




**ஸ்லோகம் - (23)**

குஹனுடன் கூடிக் குலாவி, அவனது உதவியால் கங்கையைக் கடந்து, பரத்வாஜ முனிவரிடம் சென்றடைந்தாய். அவர் மிகச் சிறப்பாக உன்னை உபசரித்தார். சித்ரகூட மலையின் அடிவாரத்தில் அழகிய குடிலை அமைத்து, அங்கு உறையும்படி உனக்குக் கட்டளையிட்டார். அவ்வாறே நீ இலக்குவனைக் கொண்டு பர்ணசாலையை அமைத்து, அங்கு இன்பமாகப் பொழுது போக்கினாய்.

**ஸ்லோகம் - (24)**

பரதன் சித்ரகூடத்திற்கு வந்து உன்னை வணங்கி, அயோத்திக்கு மீண்டும் எழுந்தருளி ராஜ்ஜியத்தை ஆளுமாறு நிர்பந்தித்து வேண்டினான். வஸிஷ்டர், ஜாபாலி முதலிய முனிவர்களும் பல நியாயங்களை எடுத்துக் கூறி, உன்னை நாடு திரும்புமாறு கட்டளையிட்டனர். நீ அவர்கள் கூறியவற்றைவிட பெரிய நியாயங்களை எடுத்துக் கூறி, அவர்கள் கட்டளையை ஏற்காமல், வனம் செல்லவே துணிந்தாய். எல்லோருக்கும் கட்டளையிடுபவனான நீ, யாருடைய கட்டளைக்குக் அடிபணிய வேண்டும்?

**தொடரும்...**

